திருமணத்தில்
ஒற்றுமை

நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்.[1]
(நான் என் நேசமானவளுடையவர், என் நேசமானவள் என்னுடையவள்.)

தேவனே, நாங்கள் ஒரே மாம்சம் ஆகும்படி எங்களை இணைத்துள்ளீர்.[2]

உம்முடன் இணைந்து, நாங்கள் சீக்கிரம் அறுந்து போகாத முப்பிரி நூலை உருவாக்குகிறோம்.[3]

நாங்கள் விபச்சாரம் செய்யமாட்டோம்.[4]

எங்கள் திருமணத்தை நாங்கள் கனம்பண்ணி, எல்லா சூழ்நிலைகளிலும் ஒருவருக்கொருவர் உண்மை உள்ளவர்களாக இருப்போம்.[5]

எங்கள் அன்பு எப்போதும் பாதுகாக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் சகிக்கும். அது தற்பொழிவை நாடாது, தீமைகளை கணக்கில் கொள்ளாது.[6]

நான் என் சுய நன்மையைத் தேடாமல், என் நேசர் / நேசமானவளின் நன்மையையே தேடுவேன்.[7]

நாங்கள் கிறிஸ்துவுக்கு பயப்படும் பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க உதவி செய்யும்.[8]

இரும்பு இரும்பை தீட்டுவது போல,
நாங்கள் ஒருவரை ஒருவர் தீட்டுகிறோம்.[9]

நான் கீழே விழுந்தால், என் நேசர் / நேசமானவள் என்னை தூக்கி எடுப்பார்.[10]

தேவனே, நீர் பிதாவோடு ஒன்றாய் இருப்பது போல எங்களை ஒன்றாக்கும்.[11]

இயேசுவின் வல்ல நாமத்தில் ஜெபிக்கிறோம்.
ஆமென்.

[1] உன்னதப்பாட்டு 6:3
[2] ஆதியாகமம் 2:24
[3] பிரசங்கி 4:12
[4] யாத்திராகமம் 20:14
[5] எபிரெயர் 13:4
[6] 1 கொரிந்தியர் 13:4-7
[7] 1 கொரிந்தியர் 10:24
[8] எபேசியர் 5:21
[9] நீதிமொழிகள் 27:17
[10] பிரசங்கி 4:10
[11] யோவான் 17:11

உன்னதப்பாட்டு 6:3
நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்;....

ஆதியாகமம் 2:24
இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

பிரசங்கி 4:12
ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது.

யாத்திராகமம் 20:14
விபசாரம் செய்யாதிருப்பாயாக.

எபிரேயர் 13:4
விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.

1 கொரிந்தியர் 13:4–7
அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

1 கொரிந்தியர் 10:24
ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்.

எபேசியர் 5:21
தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

நீதிமொழிகள் 27:17
இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான்.

பிரசங்கி 4:10
ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே.

யோவான் 17:11
...நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au